©
தமிழ்நாடு அரசு
2017

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 0.80 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 51] சென்னை, புதன்கிழமை, டிசம்பர் 20, 2017
மார்கழி 5, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2048

## பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

### தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

**அறிவிக்கை**

*[அரசாணை நிலை எண் 166, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (H2)த் துறை, 23 செப்டம்பர் 2017.]*

1961–ஆம் ஆண்டு பேறுகாலச் சலுகைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம்53/1961) 28 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு 1967 ஆம் ஆண்டு பேறுகாலச் சலுகை விதிகளில் செய்யக்கருதியுள்ள பின்வரும் வரைவுத் திருத்தங்கள், அதனால், பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக, மேற்சொன்ன சட்டத்தின் 28 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் சொல்லியுள்ளவாறு, இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த வரைவுத் திருத்தங்கள், ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து நாற்பத்தைந்து நாட்கள் முடிவடைந்த பின்னர், பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும், மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், இது தொடர்பாக எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற மறுப்புரையை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்கும் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை எவையேனும் இருப்பின், அவற்றை எண். 47/1, சிட்கோ தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை–600 032–ல் உள்ள தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் மூலமாக அரசு செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009 என்ற முகவரிக்கு இருபடிகளில் அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவுத் திருத்தம்**

மேற்சொன்ன விதிகளில், 16 ஆம் விதியைச் சேர்ந்த துணைவிதி 1 இன் வரம்பு நிபந்தனையில், “தமிழ்நாடு 1950 ஆம் ஆண்டு, தொழிற்சாலைகள் விதிகள்,” என்ற சொற்றொடருக்குப் பின்னர் “அல்லது தமிழ்நாடு 2006 ஆம் ஆண்டு கட்டடம் மற்றும் ஏனைய கட்டுமானத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பை முறைப்படுத்தல் மற்றும் பணி நிலைமைகள்) விதிகளின்கீழ் 242 ஆம் விதியில் கோரியுள்ளவாறு, XIII-ஆம் •விவர அட்டவணையின் கீழ் படிவம் XXV-இல் ஒருங்கிணைந்த ஆண்டு விவர அறிக்கை” என்ற சொற்றொடர் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்.

**மங்கத் ராம் சர்மா,**
*அரசு செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

DTP—51-III-1(a)(T-Sup)—1